1979 நவம்பர் 7]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

திரு. க. சுப்பு: ஒரே ஒரு வார்த்தை, முக்கியமான திருத்தமாக வரும் பொழுது யாராவது இரண்டு பேர்களைப் பேசச் சொல்லிவிட்டு முடிக்க வேண்டுமே தவிர நீங்கள் பாட்டுக்கு ரேஸ் குதிரை மாதிரி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் கையைத் தூக்கவில்லை. இதே மாதிரி ஒத்துழைத்தால் மிகவும் நல்லது.

---

* 1979 நவம்பர் 3 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசுச் சிறப்பிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.